# திருவள்ளூர் மத்திய மாவட்டம் - பூவிருந்தவல்லி தொகுதிக்கு உட்பட்ட பி.எல்.சி. ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் உள்ள பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் பகுதிகளில் நடைபெற உள்ள பி.எல்.சி. ஆய்வு கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி சம்பந்தப்பட்ட ஒன்றிய நகர கழக செயலாளர்கள் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் பூவிருந்தவல்லி தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

| நாள் / நேரம் | இடம் | கழக நிர்வாகம் | செயலாளர்கள் | வார்டு / ஊராட்சி | பூத் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 09.11.2024 மாலை 6 மணி | பத்திரி நாராயண மஹால், கரையான்சாவடி | பூவிருந்த வல்லி நகரம் | திரு. GR திருமலை | – | 281 முதல் 295 வரை |
| 10.11.2024 காலை 10 மணி | நாடார் சங்க திருமண மண்டபம், பழைய நகராட்சி அருகில் | | | – | 296 முதல் 310 வரை |
| 12.11.2024 மாலை 6 மணி | S.S. மஹால், குமணன்சாவடி | | | – | 311 முதல் 315 வரை |
| 14.11.2024 மாலை 6 மணி | சாய் மஹால், பூவிருந்தவல்லி | | | – | 316 முதல் 337 வரை |
| 09.11.2024 காலை 10 மணி | SSD பார்ட்டி ஹால், பாக்கம் | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | திரு. சே.பிரேம் ஆனந்த் | சிவன்வாயல், மேலக் கொண்டையார், புலியூர், பாக்கம், நத்தமேடு | 69, 70, 71, 72, 73, 74, 75, 131 132, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 141, 142, 143, 144, 145, 146, 147 |
| 09.11.2024 காலை 11 மணி | கோவிந்தராஜலு திருமண மண்டபம், 25 வேப்பம்பட்டு | | | தொட்டிகலை, அயத்தூர், 26 வேப்பம்பட்டு, 25 வேப்பம்பட்டு | 79, 80, 127, 128, 129, 130, 148, 149, 150, 151, 152, 153, 154, 155 156, 157, 158, 159, 160, 161, 162, 163, 164, 165, 166, 168 |
| 10.11.2024 காலை 9 மணி | வெள்ளியூர் சமுதாயக் கூடம் | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | திரு. புஜ்ஜி D ராம கிருஷ்ணன் | வெள்ளியூர், விளாப்பாக்கம், கரிகலவாக்கம், அரும்பாக்கம், விஷ்ணுவாக்கம், கீழானூர், மேலானூர் | 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39 |
| 10.11.2024 மதியம் 12 மணி | தாட் சாயணி திருமண மண்டபம் | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | திரு. தங்கம் முரளி | வெங்கல், செம்பேடு, மாகரல் | 1 , 2, 3, 4, 5, 6, 7, 15, 16 |
| 13.11.2024 காலை 10 மணி | | | | தாமரைப் பாக்கம், கொமக்கம்பேடு, கோடுவெளி | 8, 9, 10, 11, 12, 13, 14, 22, 23 |
| 13.11.2024 மதியம் 12 மணி | | | | குருவாயல், சேத்துப்பாக்கம், கன்னிகாபுரம், ஆயில்சேரி | 17, 18, 19, 20, 21, 24, 25, 26 |
| 11.11.2024 மாலை 6 மணி | அறிஞர் அண்ணா சமுதாய நலக்கூடம், காவல்சசேரி ரோடு | திரு மழிசை பேரூர் | திரு. தி.வே. முனுசாமி | – | 354 முதல் 363 வரை |
| 12.11.2024 மாலை 6 மணி | புஷ்பா துரை திருமண மண்டபம், தெற்கு மாட வீதி | | | – | 364 முதல் 373 வரை |
| 09.11.2024 சனிக்கிழமை காலை 10.00 மணி | சமுதாய நலக்கூடம் பாரிவாக்கம். | பூவிருந்த வல்லி கிழக்கு ஒன்றியம் | திரு. ப.ச. கமலேஷ் | பாரிவாக்கம் | 237, 238, 239, 240, 241 |
| | | | | பாணவேடுத்தோட்டம் | 205, 206 |
| | | | | காவல்சேரி | 233 |
| | | | | வயலாநல்லூர் | 207, 208, 209 |
| | | | | கோளப்பஞ்சேரி | 210 |
| 09.11.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி | C.S. ஹரிபிரியா திருமணமண்டபம் நசரத்பேட்டை | | | செம்பரம்பாக்கம் | 381, 382, 383, 384, 385 386, 387, 388, 389 |
| | | | | வரதராஜபுரம் | 234, 235, 236 |
| | | | | மேப்பூர் | 390, 391, 392, 393 |
| | | | | நசரத்பேட்டை | 344, 345, 346, 347, 348, 349, 350, 351, 352, 353 |
| | | | | அகரமேல் | 394, 395, 396, 397 |
| 10.11.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி | பிரேமலக்ஷ்மி திருமண மண்டபம் காட்டுப்பாக்கம். | பூவிருந்த வல்லி கிழக்கு ஒன்றியம் | திரு. ப.ச. கமலேஷ் | காட்டுப்பாக்கம் | 261, 262, 263, 264, 265, 266, 267, 268, 269, 270, 271, 272, 273, 274, 275, 276, 277, 278, 279, 280, 281, 282, 283, 284, 285, 286, |
| 10.11.2024 ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணி | கஸ்தூரி மஹால் சென்னீர்குப்பம் | | | சென்னீர்குப்பம் | 242, 243, 244, 245, 246, 247, 248, 249, 250, 251, 252, 253, 254, 255, 256, 257, 258, 259, 260 |
| 10.11.2024 மாலை 3 மணி | சித்துக்காடு மைதானம் | பூவிருந்த வல்லி மேற்கு ஒன்றியம் | திரு.தேசிங்கு | கருணாகரச்சேரி, அன்னம்மேடு, திருமணம், சித்துக்காடு, மேல்மணம்பேடு, வெள்ளவேடு, குத்தம்பாக்கம் | 193, 194, 211, 212, 213, 229, 230, 231, 232, 374, 375, 376, 377, 378, 379, 380 |
| 10.11.2024 மாலை 4 மணி | கொரட்டூர் மைதானம் | | | கொசவன்பாளையம், கொரட்டூர், கூடப்பாக்கம். படூர். நேமம் | 214, 215, 216, 217, 218, 219, 220, 221, 222, 223, 224, 225, 226, 227, 228 |

எனவே இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு பூவிந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி பொறுப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள் அது சமயம் ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர்கள் கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் பி.எல்.ஏ. 2 / பி.எல்.சி. பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

அமைச்சர் **ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர் – திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# விழுப்புரம் விற்பனைக்குழு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

சென்னை, நவ. 7 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (6.11.2024) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் விழுப்புரம் விற்பனைக் குழு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

விழுப்புரம் விற்பனைக் குழு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட ஒரு கிடங்கு, 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழவகைகள் (எளிதில் அழுகும் வேளாண் பொருட்கள்) இருப்பு வைத்து ஏல விற்பனை செய்வதற்காக 25 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர் பதன கிடங்கு மற்றும் ஒரு திறந்தவெளி எலக் கொட்டகை ஆகிய வசதிகள் உள்ளன. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல், நிலக்கடலை, பருத்தி, எள் ஆகிய வேளாண் பொருட்களை விற்பனை கூடத்திற்கு கொண்டு வந்த அன்றைய தினமே தரப்பரிசோதனை கருவிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் ஏலதாரர்களால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, ஏலம் விடப்படுகின்றன. ஏலம் விடப்படும் தொகை குறைவாக இருப்பதாக விவசாயிகள் கருதினால் தாங்கள் கொண்டு வந்த பொருட்களை 15 நாட்கள் வரை எந்த ஒரு கட்டணமுமின்றி கிடங்கியில் இருப்பு வைக்கவும் தமிழ்நாடு அரசால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் விற்பனைக்குழு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி எள், நிலக்கடலை (மணிலா) மற்றும் நெல் உள்ளிட்ட விளை பொருட்கள் வைக்கப் பட்டுள்ள கிடங்கு களையும், திறந்த வெளி ஏலக் கொட்டகையில் தரப்பரிசோதனை நடைபெறுவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண் டார்.

இந்த ஆய்வின்போது, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நெல் விற்பனை செய்வதற்காக வந்திருந்த பிடாகத்தை சேர்ந்த சக்கரவர்த்தி என்ற விவசாயியிடம் தற்பொழுது நெல் விற்பனை செய்ததற்கான ஏலத்தொகை விவரம், எத்தனை நாட்களுக்குள் தங்களுடைய வங்கி கணக்கில் நெல்லிற்கான தொகை வரவு வைக்கப்படுகிறது என்பது குறித்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்து, அரசு அலுவலர்கள் தெரிவித்த விவரங்களுடன் விவ சாயி தெரிவித்த விவரங்கள் சரியாக உள்ளதா என்று ஆய்வு செய்தார்.

மேலும், வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் குடிநீர், கழிப்பறை வசதி, வாகன நிறுத்தும் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், ஒழுங்குமுறை விற்ப னைக்கூடத்தில், அன்றாட சந்தை நில விவரம், விளைபொருட்கள் இருப்பு பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார்.

விவசாயிகள் விற்பனை செய்த விளைபொருட்களுக்கான ஏலத்தொகை அவர்களின் வங்கிக்கணக்கில் இநாம் மின்னணு ஏல முறை திட்ட த்தின்கீழ், வரவு வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை கணினியில் அமர்ந்து கணினியை இயக்கி ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர்.தாரேஸ் அஹமது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சி.பழனி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ் ஜெய் நாராயணன், உட்பட வேளாண்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

# தொகுதி வாரியாக பாக முகவர்கள் பி.எல்.ஏ-2 ஆலோசனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதாஜீவன் அறிவிப்பு!



*தூத்துக்குடி, நவ.7-*

*முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவரகள் அறிவுறுத்தலின் படி தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி, விளாத்திகுளம் மற்றும் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டங்கள் கீழ்க்கண்ட விபரப்படி நடைபெறும். இக்கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்டக் கழகநிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், பகுதி, உட்பட்ட மற்றும் கிளைக் கழக செயலாளர்கள், பாகமுகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.*

*கூட்டங்கள் நடைபெறும் விபரம் வருமாறு:*

*தூத்துக்குடி 08.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 06.00மணி - கலைஞர் அரங்கம், தூத்துக்குடி - இன்பாரகு (மாநில இளைஞரணி துணை செயலாளர்)*

*விளாத்திகுளம் 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி - ஜி.வி. மாஹால், விளாத்தி குளம் - பெருமாள் (மாநிலநெசவாளர்அணி அமைப்பாளர்)*

*கோவில்பட்டி 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணி - சத்தியபாமா திருமண மண்டபம், கோவில்பட்டி - கணேசன் (மாநில விவசாய அணி துணை அமைப்பாளர்)*

*பொருள் : துணை முதலமைச்சர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா தொடர் நிகழ்ச்சிகள் குறித்து. வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி குறித்து. 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு புதிய பூத்கமிட்டி நிர்வாகிகள் நியமிப்பது குறித்து மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.*

*இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் கூறியுள்ளார்.*

